**லங்கா பொஸ்பேற் லிமிடெட் -2022/ 2023**

-----------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

லங்கா பொஸ்பேற் லிமிடெட்டின் (“கம்பனி”) 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.5.1 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 34,427,525 ஆன கடன்பட்டோர் மீதியில் அறவிட முடியாக் கடனுக்கான நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 05 வருடங்களுக்கு மேல் அறவிட வேண்டிய கடன் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 9,769,506 ஆக இருந்ததுடன் கணக்காய்வுத் திகதி வரையிலும் இந்த மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க நிறுவனங்களிலிருந்து அறவிட முடியாத 10 வருடங்களுக்கு மேற்பட்ட மீதிகளை முறையான பிரகாரம் பதிவழிப்பதற்கு நிதி அமைச்சிலிருந்தும் ஆலோசனை பெறப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இந்த மீதிகளை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வாரியபொல தென்னை உர கலவைக் கூடத்திற்குரிய கடன்பட்டோரிடமிருந்து பணத்தை அறவிடுதல் விரைவுபடுத்தப் பட்டுள்ளதுடன் அவர்களில் இருவருக்காக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு இயலுமான சகல நடவடிக்கைகளும் பின்பற்றப்படல் வேண்டும். |

#### 1.5.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 35,867,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட கிறசர் இயந்திரம் எந்தவொரு பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் கம்பனியின் வளவில் விளைவற்று வைக்கப்பட்டிருந்ததுடன் அதற்குரிய நிறுத்தி வைத்தல் ரூபா 4,386,358 தொகையும் தீர்த்து வைக்காமல் 2014 ஆம் ஆண்டு முதல் அட்டுறு செலவினமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த இயந்திரம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் காரணமாக அதனை உற்பத்தி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துதல் மற்றும் நவீனமயப்படுத்துதல் தாமதமாகியிருந்தது. இயந்திரத்தை நவீனமயப்படுத்தி உற்பத்தியில் ஈடுபடுத்துவதற்குள்ள இயலுமை தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து ஆலோசனை கோரப்பட்டுள்ளது. இயந்திரத்தின் தேவை மற்றும் எதிர்கால உற்பத்தி செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்துதல் தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகளை எடுக்கும் போது நிறுத்திவைக்கப்பட்டுள்ள ரூபா 4.3 மில்லியன் தொகையைப் பயன்படுத்துவதற்கு முகாமைத்துவம் தீர்மானித்துள்ளது. | செலுத்த வேண்டிய மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 35,284,555 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 122,782,789 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 87,498,234 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. வட்டி மற்றும் ஏனைய வருமானம் ரூபா 72,123,040 இனால் அதிகரித்து விற்பனைக் கிரயம் ரூபா 55,014,073 இனால் குறைவடைந்திருந்த போதிலும் விற்பனை வருமானம் ரூபா 195,453,219 இனால் குறைவடைந்தமை மற்றும் ஆலைகள் மற்றும் நிர்வாக பொது மேந்தலைக் கிரயம் ரூபா 22,319,835 இனால் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 82,925,144 வங்கி மேலதிகப்பற்று காணப்பட்டதுடன் அதற்காக ஆண்டின் போது ரூபா 9,749,495 மேலதிக பற்று வட்டி செலுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். நாட்டில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடியின் மத்தியிலும், உரங்களின் விலை உயர்வடைந்ததுடன் நாட்டில் உரப்பாவனை மற்றும் உர கலவைகள் குறைவடைந்தமையினால் 2022/23 ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட இலக்கில் 50 சதவீதம் மாத்திரம் அடையக்கூடியதாக இருந்தது. அதன் பிரகாரம் ஏற்பட்டிருந்த நிதி ரீதியான நெருக்கடிகளின் காரணமாக கம்பனிக்குச் சொந்தமான நிலையான வைப்புக்களை பிணையாக வைத்து வங்கி மேலதிகப் பற்று வசதிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டி ஏற்பட்டிருந்தது. நிலையான வைப்பின் மூலம் உழைக்கப்பட்ட வட்டி அளவு இந்த மேலதிகப்பற்று வட்டியினை விட அதிகமாக இருந்ததுடன் அது நிறுவனத்திற்கு சாதகமாகும். எனினும் 2023 மே மாதம் இறுதிவரையிலும் இந்த மேலதிக பற்று வசதிகள் முழுமையாக பூர்த்திசெய்யப்பட்டு நிலையான வைப்புக்களிலும் ரூபா 590 மில்லியன் அளவில் பேணிச்செல்வதற்கும் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சரியான நிதி முகாமைத்துவத்தின் மூலம் வட்டி செலவினத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கம்பனியால் ஒவ்வொரு வருடமும் அரைக்கும் இயந்திரத்திற்காக மேலதிக உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் போது போட்டி விலைகள் கோருதல் அல்லது உள்நாட்டு வழங்குனர்களிடம் கொள்வனவு செய்வதற்கு உள்ள இயலுமை தொடர்பாக கண்டறியாமல் நேரடியாக இயந்திரம் கொள்வனவு செய்த நிறுவனத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் அதன் போது உதிரிப்பாகங்களின் தேவை தொடர்பாக மதிப்பீடு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியின் போது ரூபா 7,229,928 பெறுமதியான உதிரிப்பாக இருப்பொன்று களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாமல் இருப்பதற்காக நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளது. | உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்தல் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | கம்பனி உற்பத்தி செய்கின்ற எப்பாவெல ரொக் பொசுபேற் (ERP) மற்றும் அதி சிறந்த தரத்தில் எப்பாவெல ரொக் பொசுபேற் (HERP) உர இருப்புக்களில் காணப்பட வேண்டிய பொசுபேற் ($P_2O_5$) சதவீதம் பரீட்சிக்கப்படுகின்ற UV- Visible Spectrophoto இந்திரம் காலாவதியாகியமையின் காரணமாக அதன் மூலம் பெறப்படுகின்ற தகவல்களின் சரியான தன்மை தொடர்பான பிரச்சினைகள் எழுந்திருந்தது. உரிய இயந்திரத்தின் தரத்தை பரீட்சித்து விற்பனை மேற்கொள்ளப்பட்ட உரம் மெற்றிக்தொன் 3,173 இருப்பில் எதிர்பார்க்கப்பட்ட நியமத்திற்கு இணங்காமையின் காரணமாக கம்பனிக்கு மீளத் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். உற்பத்தியில் காணப்பட வேண்டிய Rock Phosphate ($P_2O_5$) உள்ளடக்கத்தை அளவிடுவின்ற புதிய UV- Visible Spectrophotometer இயந்திரம் பெற்றுக்கொள்வதற்கு சகல பெறுகை நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் 02 மாதத்தில் அந்த உபகரணங்கள் களஞ்சியத்திற்கு பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | உற்பத்தியில் எதிர்பார்த்த நியமங்கள் பெறப்படாமையினால் கம்பனியின் விற்பனை தொடர்பில் பாதகமாக தாக்கமளித்திருந்தமையினால் உற்பத்திகளின் நியமத்தைப் பேணிச்செல்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கம்பனியால் விற்பனை செய்யப்படுகின்ற உரங்களில் காணப்பட வேண்டிய ரொக் பொசுபேற் சதவீதம் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் இன்மையின் காரணமாக 1 மெற்றிக்தொன் ரூபா 27,800 ஆன உயர் தரத்தில் உள்ள எப்பாவெல ரொக் பொசுபேற் (HERP) மெற்றிக்தொன் 334.30 மற்றும் 1 மெற்றிக்தொன் ரூபா 20,000 ஆன எப்பாவெல ரொக் பொஸ்பேற் (ERP) மெற்றிக் தொன் 334 விற்பனை விலையில் மீள பெற்றுக்கொள்ளும் போது ரூபா 2,607,540 நட்டம் கம்பனிக்கு ஏற்பட்டிருந்தது. | இந்த உர வகைகளை பரிமாற்றல் ஊடாக ரூபா 2,607,540 நட்டம் கம்பனிக்கு ஏற்பட்டிருந்ததாக உண்மையாககும். இதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டை அடிப்படையிலும், பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் படி HERP மெற்றிக்தொன் 334.30 அளவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக நிறுவனத்தால் எந்தவொரு போக்குவரத்து அல்லது மேலதிக ஊழியர் கிரயம் செலவிடப்படாதிருந்தமையால் உள்ளபடியாக நிறுவனத்திற்கு நட்டம் ஏற்படவில்லை. | உற்பத்தி எதிர்பார்க்கப்பட்ட நியமத்தில் இல்லாமையினால் கம்பனியின் விற்பனை தொடர்பில் பாதகமாக தாக்கமளிக்கக்கூடியதாக இருந்தமையால் உற்பத்திகளின் நிமயத்தைப் பேணிச்செல்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 21,226,633 மூலதன செலவினத்தில் ஆரம்பிக்கப்பட்ட வாரியபொல தென்னை உர செயற்திட்டத்தின் உற்பத்தி செயற்பாடுகள் 2021 மே 05 ஆம் திகதி வரையில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் மொத்த செயற்திட்டத்தின் மூலம் ரூபா 31.71 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. மேலும் செயற்திட்டப் பணிகளுக்காக ஐந்து வருட வாடகை பெறப்பட்ட காணியின் வாடகை கால எல்லை 2018 செப்டெம்பர் 05 ஆம் திகதியில் முடிவடைந்திருந்ததுடன் வாடகை உடன்படிக்கை புதுப்பிக்காமல் உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2022 செப்டெம்பர் மாதம் முதல் கம்பனிக்கு செயற்திட்ட நிலத்தில் உள்ளடங்கிய காணியின் உரித்தான தரப்பினரால் தடுக்கப்பட்டிருந்ததுடன் அந்த பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். முதலாவது 02 வருடத்தின் இந்த செயற்திட்டம் நல்ல செயல் முன்னேற்றத்தை காண்பித்திருந்த போதிலும் அதன் பின்னர் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை அடைந்துகொள்வதற்கு முடியாதிருந்தது. மேலும் காணி உரிமையாளருக்கு வாடகையாக 2021 யூன் முதல் 2022 செப்டெம்பர் வரை செலுத்த வேண்டிய ரூபா 480,000 தொகை இணை நிறுவனத்தினால் இதுவரை நிறுத்திவைக்கப் பட்டிருந்ததுடன் அவருடன் இணக்கப்பாட்டிற்கு வந்ததன் பின்னர் மாத்திரம் அந்த பணத்தை விடுவிப்பதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது. | ரூபா 21 மில்லியனுக்கு மேற்பட்ட மூலதன செலவினத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்டிருந்த செயற்திட்டமாக இருந்தமையால் எழுந்துள்ள பிரச்சினைகளை விரைவாக தீர்த்து செயற்திட்டத்தை ஆக்கபூர்வமாக அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2013 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட TGM 160 அரைக்கும் இயந்திரம் ஸ்தாபிப்பதால் மாணியாலத்திற்கு 10 மெற்றிக்தொன் மேலதிக உற்பத்தி ஒன்றை கம்பனி எதிர்பார்த்திருந்தது. இயந்திரம் 2022 செப்டெம்பர் மாதம் ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் உற்பத்திச் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு 2023 பெப்ரவரி மாதம் வரை காலம் கடந்தமையின் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட மேலதிக உற்பத்தி அடையப்படவில்லை. | 2022/2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ள வேண்டிய அத்தியவசியமற்ற கிரயங்களை குறைக்கும் நோக்கில் உள்ளபடியான விற்பனையை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தி இலக்கு மாற்றப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2022 செப்டெம்பர் முதல் 2023 பெப்ரவரி வரையான காலத்தில் மேற்கூறப்பட்ட இயந்திரம் உற்பத்திக்காக வெற்றிகரமாக பங்களிப்பை வழங்கியமையினால் இயந்திரம் 2023 பெப்ரவரி மாதம் வரை உற்பத்தி செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்படாதிருந்தது தொடர்பாக இணங்க முடியாது. | நடைமுறை நிலைமையினைக் கவனத்திற் கொண்டு திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் திட்டமிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 பெறுகைகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியால் கனிப்பொருள் அரைக்கும் இயந்திரத்திற்காக பயன்படுத்தப்படுகின்ற இறப்பர் புஸ் அலகொன்று ரூபா 350 வீதம் உள்நாட்டு கம்பனியிலிருந்து கொள்வனவு செய்து கணக்காய்வுத் திகதியான 2023 செப்டெம்பர் 14 வரையும் இயந்திரத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. உரிய பொருட்களில் 81 அலகுகள் களஞ்சியத்தில் காணப்படும் போது இருப்பு பூச்சியமாக இருந்ததாக காண்பித்து 2022 திசெம்பர் 17 ஆம் திகதி அலகொன்று ரூபா 79,082 வீதம் இறப்பர் புஸ் அலகுகள் 200 ரூபா 15,816,482 தொகையில் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 70,000 ஆன ஆகக் குறைந்த கிரயத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்த உரிய விடய இருப்புக்கள் மிகவும் உயர்ந்த பெறுமதியில் இறக்குமதி செய்ததன் மூலம் ரூபா 15,746,482 நட்டமொன்று | கொள்வனவு செய்தல் தொடர்பாக தற்போது அமைச்சு மட்டத்தில் பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்படுவதுடன் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினாலும், பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறே உயர் நீதிமன்றத்தில் காணப்படுகின்ற வழக்கிற்குரிய வழக்கினால் இந்த பிரச்சினைகள் தீர்க்க வேண்டி இருந்தது. அதன் பிரகாரம் அந்த அறிக்கையின் அடிப்படையாகக் கொண்டு இது தொடர்பாக மிகுதி நடவடிக்கைகள் எடுகப்பட்டுள்ளது. எனினும் எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாமல் இருப்பதற்கான செயற்பாடுகள் திட்டமிடப்பட்டுள் ளதுடன் | சிக்கனமற்ற கொள்வனவுகளை மேற்கொள்ளாமல் இருப்பதற்கு பொறுப்புவாய்த ஊழியர்களை இனங்கண்டு ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். அத்தியவசியமற்ற பிரகாரம் பெறப்பட்டுள்ள Coupling bolt இருப்பினைப் பயன்படுத்துவதற்கு / நட்டத்தைக் குறைக்கும் வகையில் அகற்றுவதற்கு வேலைத்திட்டமொன்று தயாரித்தல் வேண்டும். கொள்வனவு செய்யப்பட்ட இறப்பர் புஸ் இருப்பு பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தப்பட்டு பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | கம்பனிக்கு ஏற்பட்டிருந்தது. கொள்வனவு செய்த இந்த இருப்பு கணக்காய்வுத் திகதியான 2023 செப்டெம்பர் 14 வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் களஞ்சியத்தில் விளைவற்று வைக்கப்பட்டிருந்ததுடன் கொள்வனவு செய்யும் போது அந்த இறப்பர் புஸ்களின் மேலதிக Coupling bolt அலகுகள் 198 ஆகவும் அதனுடன் கிடைத்திருந்த போதிலும் அந்தக் கட்டளைகளின் உரிய இயந்திரத்திற்கு எந்தவொரு பயன்பாடும் இல்லாதிருந்தமையால் அது பயனற்று வைக்கப்பட்டிருந்தது. | பொறியியலாளரின் பரிந்துரையின் அடிப்படையில் உள்நாட்டு ரீதியில் கொள்வனவு செய்யக்கூடிய சகல இயந்திர பாகங்களும் மற்றும் உதிரிப்பாகங்களும் நாட்டில் உற்பத்தி செய்து கொள்வனவு செய்வதற்கும் அவ்வாறே வெளிநாட்டவர்களிடம் கட்டாயமாக இறக்குமதி செயற்பாடுகள் மேலதிக உதிரிப்பாகங்கள் சர்வதேச விலை பெறுகை முறையின் ஊடாக மேற்கொள்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கம்பனி இலக்கம் LPL/SUP/-HO/F1-B1D/2022/05 என்ற பெறுகை மூலம் ரூபா 86 வீதம் உர பொதிகள் 1,200,000 எண்ணிக்கையில் ரூபா 103,200,000 தொகையில் கொள்வனவு செய்வதற்கு வழங்குநருக்கு ஒப்பந்தம் ஒன்று கையளிக்கப்பட்டிருந்ததுடன் அதன் போது பெறுகைகள் வழிகாட்டி 5.4.10 இன் பிரகாரம் செயலாற்றல் காப்புறுதி பெற்றுக்கொண்டு பெறுகை வழிகாட்டி 8.9.1 இன் பிரகாரம் முறையான ஒப்பந்த உடன்படிக்கை எழுதி கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. வழங்குனர் 26,400 பொதிகள் ரூபா 86 வீதம் வழங்கி அதன் பின்னர் வழங்கப்பட்ட 1 பொதி விலை ரூபா 120 மற்றும் ரூபா 147 வரை அதிகரித்திருந்தது. இதன் பிரகாரம் உடன்படிக்கை செய்யப்படாமலும் செயலாற்றல் காப்புறுதி பெற்றுக்கொள்ளாமையின் காரணமாகவும் ரூபா 61,705,000 தொகையில் 717,500 உர பொதிகள் கொள்வனவு செய்யக்கூடியதாக இருக்கும் போது ரூபா 96,407,500 செலவில் கொள்வனவு செய்யப்பட்டமையால் கம்பனிக்கு ரூபா 34,704,500 நட்டம் ஏற்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் ஏற்றுக்கொள்கின்றோம்.<br>எனினும் இந்த பிரச்சினைகள் உயர் நீதிமன்றத்தின் மூலம் விசாரணையில் காணப்படுகின்ற வழக்கில் காணப்படுகின்மையால் இந்த சந்தர்ப்பத்தில் இது தொடர்பாக கருத்து வெளியிட முடியாதிருந்ததாக அறியத் தருகின்றோம். | பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் செயலாற்றல் காப்புறுதியைப் பெற்றுக்கொள்வதற்கும் முறையான ஒப்பந்த உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதற்கும் நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் மற்றும் பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(இ) கம்பனியின் TGM-160 Six Roller அரைக்கும் இயந்திரத்திற்காக ரூபா 5,656,344 தொகையில் துணைப்பாகங்கள் 2022 ஆம் அண்டின் போது சீனாவின் Henan Liming Heavy Industry Machinery Sales Co. Ltd நிறுவனத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. இதற்காக போட்டியாளர் மற்றும் முறையான பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. அதற்குரிய 2021 நவம்பர் 24 ஆம் திகதிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கையில் உரிய வழங்குனர் தெற்காசிய வலயத்தில் TGM அரைக்கும் இயந்திரத்தின் மேலதிக உதிரிப்பாகங்களை வழங்கும் முகவரானமையின் காரணமாக அந்த நிறுவனத்திற்குரிய துணைப்பாகங்களை கொள்வனவு செய்வதற்கு அருகதையாக இருந்ததாக பரிந்துரை வழங்கப்பட்டிருந்த போதிலும் பெறுகையின் பெறுமதி, பொருட்களின் மாதிரிகள் மற்றும் போட்டியாளர் வழங்குநர் தொடர்பாக முறையான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. உரிய பொருட்கள் 2023 மே 10 ஆம் திகதி நிறுவனத்தின் பிரதான களஞ்சியத்திற்கு கிடைத்திருந்ததுடன் இது தொடர்பாக நியமிக்கப்பட்ட நிறுவனம் அங்கத்தவர்களின் சரியான பரிசோதனை சபையொன்றினால் 2023 யூன் 12 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்த அறிக்கையின் பிரகாரம் விண்ணப்பிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான நிறுவனத்திலிருந்து கிடைத்த Gear Box துணைப்பாகத்தின் மாதிரியில் வேறுபாடு உள்ளமையினால் உதிரிப்பாகம் ஏற்றுக்கொள்ள முடியாதிருந்ததாக பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கணக்காய்வுத் திகதியான 2023 ஒக்டோபர் 05 ஆம் திகதி வரை இந்த துணைப்பாகங்கள் களஞ்சியப் பதிவேட்டில் உள்ளடக்காமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்ததுடன் கொள்வனவு செய்யும் போது கொள்வனவு செய்தல் தொடர்பாக தற்போது அமைச்சு மட்டத்தில் பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்படுவதுடன் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினாலும், பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறே உயர் நீதிமன்றத்தில் காணப்படுகின்ற வழக்கிற்குரிய வழக்கினால் இந்த பிரச்சினைகள் தீர்க்க வேண்டி இருந்தது. அதன் பிரகாரம் அந்த அறிக்கையின் அடிப்படையாகக் கொண்டு இது தொடர்பாக மிகுதி நடவடிக்கைகள் எடுகப்பட்டுள்ளது. எனினும் எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாமல் இருப்பதற்கான செயற்பாடுகள் திட்டமிடப்பட்டுள் ளதுடன் பொறியியலாளரின் பரிந்துரையின் அடிப்படையில் உள்நாட்டு ரீதியில் கொள்வனவு செய்யக்கூடிய சகல இயந்திர பாகங்களும் மற்றும் உதிரிப்பாகங்களும் நாட்டில் உற்பத்தி செய்து கொள்வனவு செய்வதற்கும் அவ்வாறே வெளிநாட்டவர்களிடம் கட்டாயமாக இறக்குமதி செயற்பாடுகள் மேலதிக உதிரிப்பாகங்கள் சர்வதேச விலை பெறுகை முறையின் ஊடாக மேற்கொள்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. முறையற்ற பெறுகைகளுக்கு பொறுப்புவாய்ந்த தரப்பினரை இனங் கண்டு அந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். உத்தரவாத காலத்தில் சரியான துணைப்பாகங்களைப் பெற்றுக்கொள்வதற்கு வழங்குநரிடம் இணக்கப்பாட்டில் கைச்சாத்திடுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். கொள்வனவுகளை மேற்கொள்ளும் போது போட்டியாளர் பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கு சகல சந்தர்ப்பங்களிலும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| வழங்குநருடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடாமையின் காரணமாக இது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக வழங்குநருடன் இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு முடியாதிருந்தது. கொள்வனவு செய்வதற்குரிய கட்டளையின் பெறுமதியான ரூபா 4,802,850 (ஐ.அ.டொலர் 13,000) முழுமையான வழங்குநருக்கு 2022 செப்டெம்பர் 15 ஆம் திகதி செலுத்தப்பட்டிருந்தது.<br>துணைப்பாகங்களுக்காக 15 மாத உத்தரவாத காலம் வழங்குநரால் வழங்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2023 ஒக்டோபர் 05 ஆம் திகதி வரையிலும் அதில் 07 மாத காலம் முடிவடைந்து காணப்பட்டது. | | |

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் பதவியணியினரில் ஆரம்ப நிலையில் இயந்திர செயற்படுத்துனர் பதவியில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 14 ஆக இருந்ததுடன் அதில் 50 சதவீதம் அதாவது 07 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டது. அந்த மட்டத்தில் உற்பத்தி உதவியாளர் பதவிகள் 90 இல் 07 பதவிகள் வெற்றிடமாகக் காணப்படும் போது 33 ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தனர். | எதிர்காலத்தில் சரியான முறையின் மூலம் நேர்முகப் பரீட்சை ஒன்றினை நடாத்தி தகைமைகளைப் பரீட்சித்து ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்பாட்டு நடவடிக்கைகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்காக தேவையான பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். மேலதிக ஒப்பந்த ஊழியர்கள் தொடர்பாக பணிப்பாளர் சபை விசாரணை செய்து பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2023 பெப்ரவரி 28 ஆம் திகதி திருத்தப்பட்ட கம்பனியின் மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் சுற்றாடலுக்கு இசைவான மற்றும் நவீன செயற்பாடுகள் ஊடாக பொசுபரசில் இருந்து சுயயமாக உற்பத்தி செய்யப்படுகின்ற பேசுபேற்று உரத்திற்கான தேசிய தேவையினை பூர்த்தி செய்தல் என்ற பேரில் கம்பனியின் செயற் பணிக்கு இணங்க மீளாய்வாண்டின் போது பணிப்பொறுப்புக்கள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்படாதிருந்ததுடன் ரூபா 168,600,000 நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் உற்பத்தி மற்றும் சேவை நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் 05 செயற்திட்டங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தியின் கீழ் ஒரு செயற்திட்டம் மாத்திரம் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | நிறுவனத்தின் விற்பனை நடவடிக்கைகள் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளில் 50 சதவீதம் அளவு பின்தங்கியமை மற்றும் வீழ்ச்சியடைந்தமை, நிறுவனத்தின் நாளாந்த செயற்பாடுகளை நடாத்திச் செல்வதற்காக போதியளவான வருமானம் கிடைக்காமை, வங்கி மேலதிகப் பற்று ஊடாக அடிப்படை செலவினங்களை தீர்த்தல் போன்ற விடயங்களின் அடிப்படையில் வருட ஆரம்பத்தின் போது திட்டமிடப்பட்ட அநேகமான செயற்பாடுகளைக் கைவிடுவதற்கோ அல்லது தாமதப்படுத்துவதற்கோ முகாமைத்துவத்திற்கு ஏற்பட்டிருந்தது. | கம்பனியின் செயற்பணிக்கு இணங்க பணிப் பொறுப்புக்களை திட்டமிட்டு அமுல்படுத்துதல் வேண்டும். |